# January 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கருவிழி ஒளி விலகல் அறுவை சிகிச்சைக்கான சர்வதேச மருத்துவ அமைப்பின் (ஐஎஸ்ஆர்எஸ்) தலைவராக டாக்டர் அகர்வால்ஸ் மருத்துவம்னையின் முதுநிலை மருத்துவ நிபுணர் சூசன் ஜேக்கப் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

2. இடதுசாரி ஆதரவாளராக அறியப்படும் பல்கேரியா நாட்டின் அதிபர் ரூமென் ராதேவ் தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

(i) பல்கேரியாவில் தற்போது ஆட்சியில் இருக்கும் மத்திய-வலதுசாரி அரசுக்கு எதிராக, கடந்த மாதம் மிகப்பெரிய ஊழல் எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன. இந்தப் போராட்டங்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்து வந்த அதிபர் ராதேவ், இப்போது முறைப்படி பதவியில் இருந்து விலகியுள்ளார்.

(ii) பல்கேரியாவில் கம்யூனிஸ ஆட்சி மறைந்து ஜனநாயகம் மலர்ந்த பிறகு, ஒரு அதிபர் தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்பே விலகுவது இதுவே முதல்முறையாகும். இவருக்குப் பதிலாக துணை அதிபர் இலியானா யோடோவா தற்காலிகமாக பொறுப்பேற்பார்.

(iii) ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் 'நேட்டோ' அமைப்பில் உறுப்பினராக இருக்கும் பல்கேரியா, கடந்த 2021- ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை சுமார் எட்டு முறை நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

3. கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத வகையில், முதல் முறையாக பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக முன்னேறியுள்ளது என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) தமிழக அரசால் தயாரிக்கப்பட்ட உரையை வாசிக்காமல் பேரவையிலிருந்து ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியேறினார். பின்னர் அவரது உரையை, பேரவையில் படித்ததாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 108 பக்கங்கள் கொண்ட அந்த உரையை பேரவைத் தலைவர் அப்பாவு தமிழில் வாசித்தார். அதில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:

(ii) கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத வகையில், 2024-2025 நிதி யாண்டில் 11.19 சதவீதம் என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது. முதல்முறையாக பொருளாதார வளர்ச்சியில் நாட்டி லேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

(iii) பொங்கல் திருநாளையொட்டி 2.23 கோடி குடும்பங்களுக்கு தலா ரூ.3,000 ரொக்கம் உள்ளிட்ட ரூ.6,936 கோடி மதிப்பிலான பரிசுத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(iv) சமுதாயத்தில் பெண்களின் நிலை உயரவும் அவர்களின் உரிமையை நிலைநாட்டும் உயரிய நோக்கத்துடனும் அறிமுகப்படுத்தப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் 1.30 கோடி பெண்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 உரிமைத் தொகையாகப் பெறுகின்றனர். இத்திட்டம், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்துக்காக, இதுவரை ரூ.33,464 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

(v) அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு ஒருமுறை பங்களிப்பாக ரூ. 13,000 கோடியும், மேலும், ஆண்டுதோறும் அரசின் பங்களிப்பாக கூடுதலாக ரூ.11,000 கோடியையும் தமிழ்நாடு அரசு வழங்கும்.

(vi) அரசுப் பேருந்துகளில் 'மகளிர் விடியல் பயணம்' மூலம் பெண்கள் மாதம் ரூ.888 வரை சேமிக்கின்றனர்.

(vii) கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தில் உள்ள 4.9 லட்சம் ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.34 லட்சம் கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டு, பெண்களின் பொருளாதார சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து மற்றும் வருகையை உறுதி செய்யும் வகையில், 19.34 லட்சம் குழந்தைகள் முதல்வரின் காலை உணவுத் திட்டம் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

(viii) கடந்த 5 ஆண்டுகளில் தொழில் துறையில் ரூ.12.16 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளும், 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் 36 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

(ix) மத்திய அரசு எதிர்மறை மனப்பான்மையுடன் தமிழக அரசை அணுகி வருவதால், மாநில அரசுக்கு உரிய திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வருவது கவலைக்குரியது. இது, தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக உள்ளது.

(x) ஹிந்தி மொழி திணிப்பை எதிர்த்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தற்போது அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் மூன்றாம் மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.) சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. இது மறைமுக ஹிந்தி மொழித் திணிப்பாகும். இதை மத்திய அரசு கைவிட வேண்டும்.

(xi) மிக்ஜாம், ஃபென்சால் புயல்கள் போன்ற இயற்கைப் பேரிடர்களால் தமிழகம் பெரும் சேதத்தைச் சந்தித்தபோது, சொற்பமான தொகையை மட்டுமே மத்திய அரசு விடுவித்தது.

(xii) ஒருங்கிணைந்த கல்வித்திட்டத்துக்கு ரூ.3,548 கோடியை மத்திய அரசு விடுவிக்காததால், அந்தத் திட்டங்களுக்கு உரிய முழுச் செலவையும் தமிழக அரசே ஏற்றுள்ளது.

(xiii) ஜிஎஸ்டி விகிதங்களின் சீரமைப்பு காரணமாக மாநிலங்கள் பெரும் வருவாய் இழப்பைச் சந்தித்து வரும் நிலையில், மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கக் கூடியவரிவருவாயை மடைமாற்றும் வகையில், மத்திய அரசு மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் விதிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

(xiv) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் அடிப்படை நோக்கத்தைச் சிதைக்கும் வகையில் மத்திய அரசு அண்மையில் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. தமிழக அரசின் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த

இயலாமல், நெருக்கடி தரும் காழ்ப்புணர்ச்சியின் அங்கமாகவே புதிய திட்டத்தைக் கருத வேண்டியுள்ளது. எனவே, புதிய திட்டத்தை திரும்பப் பெற வேண்டும்.

(xv) சென்னை மெட்ரோ ரயில் 2- ஆம்கட்டதிட்டத்துக்குவழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும். கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்திருப்பதன் மூலம், மெட்ரோ ரயில் திட்டத்திலும் தமிழகத்தை மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகும் நிலையே காணப்படுகிறது,

(xvi) இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும்.

(xvii) உயர் கல்வியைத் தொடரும் மாணவிகளுக்கு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நகரங்களுக்கு வரும் பெண்கள் நவீன வசதிகளுடன் நியாயமான கட்டணத்தில் பாதுகாப்பான தங்கும் வசதியைப் பெற 19 தோழி விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களை அதிகமாகக் கொண்ட (40.3%) மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

(xviii) அம்பேத்கர் அயலக கல்வித் திட்ட நிதி ரூ.36 லட்சமாக உயர்த்தப்பட்டு, 385 மாணவர்கள் வெளிநாடுகளில் பயின்று வருகின்றனர்.

(xix) கடந்த 4 ஆண்டுகளில் ரூ.425 கோடியில் 352 கோயில்களில் தொன்மை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 76 திருக்கோயில்களில் குடமுழுக்கு. நடைபெற்றுள்ளன. ரூ.8,057 கோடியில் 28,229 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.8,262 கோடியில் 8,037 ஏக்கள் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

(xx) உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் 38.53 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு இதுவரை 36.62 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

(xxi) தமிழகம் அடைய வேண்டிய வளர்ச்சி மற்றும் உயரிய இலக்குகள் குறித்து மக்களின் தேவைகள் மற்றும் கனவுகளைக் கண்டறிய ஒரு கோடியே 91 லட்சம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களைச் சந்திக்கும் 'கனவை சொல்லுங்க' திட்டம் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் விரைந்து பயணிக்கும் என்று ஆளுநர் உரை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. கிழக்கு ஜெருசலேமில் இயங்கி வரும் ஐ.நா. பாலஸ்தீன அகதிகள் நல அமைப்பின் (யு.என்.ஆர்.டபிள் யூ.ஏ.) தலைமையகத்தை, இஸ்ரேல் அரசு புல்டோசர்கள் கொண்டு இடித்தது.

(i) இஸ்ரேலுக்கு எதிராக விரோதப் போக்குடன் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, ஐ.நா.வின் முக்கிய அமைப்புகள் உள்பட சில சர்வதேச அமைப்புகளில் இருந்து அந்நாடு அண்மையில் விலகியது குறிப்பிடத்தக்கது.

5. நிகழாண்டு சீசனின் முதல் கிராண்ட்ஸ்லாமான ஆஸி. ஓபன் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

(i) ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பந்தயத்தில் முன்னணி வீரர் இத்தாலியின் ஜேக்

சின்னர், சிட்சிபாஸ் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒஸாகா, ரைபகினா இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினர். மூத்த பிரெஞ்சு வீரரான கேல் மொன்பில்ஸ் தோல்வியுடன் விடைபெற்றார்.

6. கேலோ இந்தியா 6-ஆவது குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் முதல்கட்டமாக பனி ஸ்கேட்டிங் மற்றும் பனி ஹாக்கி போட்டிகள், லடாக் யூனியன் பிரதேசத் தின் லே நகரில் தொடங்கி வருகிற ஜன.26-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இப்போட்டிகளுக்கான தொடக்க விழா, நவாங் டோர்ஜன் ஸ்டோப் தான் (என்டிஎஸ்) மைதானத்தில் நடைபெற்றது.

(i) லடாக் துணைநிலை ஆளுநர் கவிந்தர் குப்தா போட்டிகளை தொடங்கிவைத்தார்.